தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2023

**10 வயதுப்பிரிவு**
(01.01.2013 – 31.12.2013 வரையில் பிறந்தோர்)

## தமிழீழ காவல்துறை

விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும்போதே, நாடொன்றுக்குரிய அனைத்து நிர்வாகக் கட்டமைப்புகளையும் கொண்டிருந்த பெருமை பெற்றது எங்கள் தாய்நாடாகிய தமிழீழம். சொந்த நாட்டின் வளங்களையும் மக்களின் ஆதரவையும் முதலீடாகக் கொண்டு, வல்லரசுகளுக்கும் உயர்வான நல்லாட்சி நடத்திக் காட்டியவர் எங்கள் தலைவர் மாமா.

தமிழீழத்தில் எமது மக்கள் எவ்வித அச்சமும் இன்றி வாழ, நீதித்துறையும் சட்ட ஒழுங்குகளும் மிகச் சரியாகப் பேணப்பட வேண்டும். அதனை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டதே தமிழீழ காவல்துறை. 1991 நவம்பர் 19 ஆம் நாள் தமிழீழ காவல்துறையினது செயற்பாடுகள் தலைவர் மாமாவால் தொடக்கி வைக்கப்பட்டது.

“குற்றங்கள் நடந்து முடிந்தபின் குற்றவாளியைத் தேடிப்பிடித்து நீதிமன்றத்தில் நிறுத்துவது தமிழீழ காவல்துறையின் நோக்கமல்ல. குற்றங்கள் நிகழாதவாறு தடுத்து, குற்றச் செயல்களற்ற குமுகாயத்தைக் கட்டி எழுப்புவதே அதன் இலக்கு” என்று கூறிய தலைவர் மாமாவின் வழிகாட்டலை ஏற்று, அதனை நிறைவேற்றியவர்கள் தமிழீழ காவல்துறையினர்.

தமிழீழ காவல்துறைக்குத் தமிழீழ மக்கள் கொடுத்த மதிப்பும் ஒத்துழைப்பும் அளப்பெரியது. கைவிலங்குகள் இடப்படாமல் மிதியுந்துகளில் ஏற்றிச்சென்று குற்றவாளிகளை நீதிமன்றில் நிறுத்திய வரலாறு தமிழீழத்தில் நிகழ்ந்தமை இதற்குச் சான்று. காவல்துறை மக்களுக்கானது என்ற நிலையை உருவாக்கிச் செயற்படுத்திக்காட்டியது தமிழீழ காவல்துறை.

அருகிய வளங்களும் பெருகிய தேவைகளும் கொண்ட போர்க்காலச் சூழலிலும் சட்ட ஒழுங்குகளைப் பேணுவதில் நிமிர்ந்து நின்ற எங்கள் தாயகம், இன்று சிங்கள அரசாலும் காவல்துறையாலும் குற்றவாளிகளின் கூடாரமாக மாறிவிட்டது. இந்நிலை மாறவும் எமது மக்கள் விடுதலை பெற்ற வாழ்வு வாழவும் தமிழீழத் தாயகத்தை மீட்பதே எமக்கான ஒரே வழியாகும்.

நன்றி,
வணக்கம்.